
திருவாசகம் - 09
திருப்பொற்சுண்ணம் கதைவடிவில்
கே. வி. குணசேகரம்

வைத்திலிங்கம். எனது தாயார் எனக்கு 10 வயதில் காலமானதால் அவரது விபரங்கள் கிடைக்கவில்லை.



தந்தையின் தந்தையும், தாயும்.



## என்னுரை

திருவெம்பாவைப் பாடல்களும், திருப்பொற்சுண்ணப் பாடல்களும் இளம் பெண்களால் பாடப்படுவன. அந்த அழகிய பெண்கள் சிவனின் புகழைப் பாடிப் பாடிப் பொற்சுண்ணம் இடிக்கின்றனர். இடிக்கப்படும் பொற்சுண்ணப் பொடியால் சிவனை நீராட்டுகின்றனர். ஆனால் நமது நாட்டில் இச் சடங்குக் குளிப்பு மரணக்கிரியைகளின் போது செய்யப்படுகிறது. இறந்தவர்களின் ஆண் பிள்ளைகள் வாசனைப் பொடிகளை உரலில் இட்டுப் பொற்சுண்ணம் இடித்துப் பிரேதத்தை குளிப்பாட்டுகின்றனர். சவத்தைச் சிவமாகக் கருதிச் செய்வதனால் சிவமான உடலை ஆரியரான பிராமணர் பார்க்கக்கூடாதாம். அவர்கள் பிரேதத்தை எடுத்த பின்பே வருவார்கள். பின் அந்தியேட்டிக்கு வந்து பணம், பொருள், பிடைவை வகைகளை வாங்கிச் செல்வர். இம்முறை சைவத்திற்கு முரணானது. திருமந்திரமும் திருவாசகமும் பிராமணரது கிரியை முறையை ஏற்கவில்லை. இது பற்றி அறிந்தவர்கள் தான் கூறவேண்டும். இங்கு அப்படியானவர்கள் இருப்பதாகத் தெரியவில்லை.

"சொல்லற்கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்திலுள்ளார் சிவனடிக்கீழ்"

என்று மாணிக்கவாசக சுவாமிகள் சொல்கிறார். இது தெரியாதவர்கள் திருவாசகத்திற்கு எதைச் செய்தாலும் பயனில்லை. சொல்லும்போது பல தவறுகள் உண்டாகின்றன. இதனால் என்ன பலன். நாம் பயனில்லாத செயல்களைத்தான் செய்து கொண்டிருக்கிறோம். இதை யார் உணர்வார்கள். பணமும் பொருளும் அதிகாரமும் இப்போது கோலோச்சலாம். இவை பின்னுக்கு உதவாது. அதனால் எனது கதைகளை வாசித்துப் பாருங்கள் சரியானால் பின்பற்றுங்கள்.

நன்றி.

கே.வி.குணசேகரன்

உ

சிவமயம்

# திருப்பொற்சுண்ணம் ஆனந்தமனோலயம்

## தில்லையில் அருளியது ஆறு சீர்காழி நெடிலாசிரிய விருத்தம்

பல்வேறு வகையான வாசனைத் திரவியங்களை உரலில் இட்டு இடிக்கப்படுவது பொற்சுண்ணம் எனப்படும். இது பொன்நிறத்தை உடையது. இதற்குப் பொன்னும் சிறிதளவு சேர்த்தல் வேண்டும். திருமஞ்சனத்திற்காக இது இடிக்கப்படுகிறது.

**முத்துநல் தாழம்பூ மாலைதூக்கி**
**முளைக்குடந் தூபம்நல் தீபம்வைம்மின்**
**சத்தியும் சோமியும் பார்மகளும்**
**நாமகளோடு பல்லாண்டிசைமின்**
**சித்தியுங் கௌரியும் பார்ப்பதியும்**
**கங்கையும் வந்து கவரிகொண்மின்**
**அத்தன் ஐயாறன் அம்மானைப்பாடி**
**ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.** 01

அழகிய பந்தல் அமைத்து நறுமணம் கமழும் பூமாலைகளையும், முத்துமாலைகளையும் தொங்கவிடுங்கள். மங்கல காரியங்கள் செய்யும்போது நவதானியங்களை ஒரு மண்பாத்திரத்தில் முளைக்கவிடுவர். அப்படி முளைத்த முளைக்கலத்தையும், தூபத்தட்டையும், தீபத்தட்டையும், வையுங்கள். சக்தியும், சோமியும், நிலமகளும் சரஸ்வதியோடு கூடிப் பல்லாண்டு பாடுங்கள். அப்போது சித்தியும் கௌரியும், பார்வதியும், கங்கையும் வந்து சாமரம் வீசுவார்கள் திருவையாற்றுக் கடவுளாகிய நம் தந்தையான சிவனைக் குறித்து பாடியாடி நாம் பொற்சுண்ணம் இடிப்போம்.

**பூவியல் வார்சடை எம்பிரார்க்குப்**
**பொற்றிருச் சுண்ணம் இடிக்கவேண்டும்**
**மாவின் வடுவகி ரன்ன கண்ணீர்**
**வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்**
**கூவுமின் தொண்டர் புறநிலாமே**
**குனிமின் தொழுமினெங் கோனெங்கூத்தன்**
**தேவியுந் தானும் வந்தெம்மையாளச்**
**செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே.** 02

“அழகு மிக்க நீண்ட சடாமுடியை உடைய எம்பிரானான சிவனுக்கு நறுமணம் வீசுகின்ற கதம்பப்பொடியை இடித்தல் வேண்டும். மாம்பிஞ்சின் பிளவை ஒத்த கண்களை உடையவர்களே, வாருங்கள், வந்து எம்மோடு சேர்ந்து பாடுங்கள். சிவனுக்கு இனியவர்களான தொண்டர்களை வெளியே காத்திருக்கச் செய்யாதீர்கள். உடனே அழைத்து வாருங்கள். சிவனைப் போற்றிக் கூத்தாடுங்கள். எம் இறைவனும் கூத்தனுமாகிய சிவபெருமான், தேவியுடன் எழுந்தருளி வந்து எம்மை ஆட்கொள்ளும்பொருட்டுச் செம்பொன்நிறமுடைய கதம்பப்பொடியை நாம் இடிப்போம் வந்து சேருங்கள்.”

**சுந்தர நீறணந் தும்மெழுகித்**
**தூயபொன்சிந்தி நிதிநிரப்பி**
**இந்திரன் கற்பகம் நாட்டியெங்கும்**
**எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்**
**அந்தார் கோன்அயன் தன்பெருமான்**
**ஆழியான் நாதன்நல் வேலன்தாதை**
**எந்தரும் ஆளுமை யாள்கொழுநற்**
**கேய்ந்த பொற்சுண்ணம் இடித்துநாமே.** 03

“அழகிய வெண்ணீற்றை அணிந்து, தரையைச் சாணத்தால் மெழுகி, புனிதமான பொன்நிறமுடைய கொடிகளைத் தூவி, நவதானியங்களைப் பரப்பி இந்திரனது கற்பகவிருச்சத்தை நாட்டி எல்லா இடங்களிலும் தீபங்களை ஏற்றி வைத்து ரிசபக் கொடியை உயர்த்தி, இந்திரனுக்கும், பிரமாவுக்கும் தலைவன், விஸ்ணுவுக்கு நாயகன், முருகனுக்குத் தந்தை, எம்மை ஆண்டருளும் தாயான உமாதேவிக்குக் கணவன் இத்தகைய பெருமைகள் மிக்க எம் இறைவனான சிவபெருமானுக்குப் பொற்சுண்ணம் இடிப்போம் நாம்.”

**காசணி மின்கள் உலக்கையெல்லாம்**
**காமபணி மின்கள் கரையுரலை**
**நேசமுடைய அடியவர்கள்**
**நின்று நிலாவுக என்றுவாழ்த்தித்**
**தேசமெல்லாம் புகழ்ந் தாடுங் கச்சித்**
**திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடிப்**
**பாசவினையைப் பறித்துநின்று**
**பாடிப் பொற்சுண்ணம் இடித்துநாமே.** 04

“உலக்கைகளுக்கு அழகிய வண்ண வண்ண மணிகளைக் கோர்த்துக்கட்டுங்கள். உரல்களுக்குப் பட்டாடை சுற்றுங்கள். சிவனில் பேரன்பு பூண்ட சிவனடியார்களை வாழ்த்துங்கள், உலக மக்களைப் புகழ்ந்து பாடப்படுகின்ற திருவேகம்பமுடையானது திருக்கோவிலைப் புகழ்ந்து பாடுங்கள். எமது பாச வினைகளை அறுக்கும்படி சிவனை வேண்டி பாடிக் கொண்டே பொற்சுண்ணம் இடிப்போம் நாம்.”

**அறுகெடுப்பார் அயனும்அரியும்**
**அன்றிமற்றிந்திர னோடமரர்**
**நறுமுறு தேவர்கணங்களெல்லாம்**
**நம்மின்பிற் பல்லதெடுக்க வொட்டோம்**
**செறிவுடை மும்மதில் எய்தவில்லி**
**திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி**
**முறுவற்செவ் வாயினீர் முக்கணப்பற்**
**காடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.** 05

அங்கிருந்த ஒரு பெண் சொல்கிறாள்; “பிரமாவும் விஸ்ணுவும் குடவிளக்கை ஏந்தட்டும். இந்திரனும் முணுமுணுக்கும் தேவர்களும் எமக்குப் பின்பு நின்று விளக்கை ஏந்தட்டும். நாம் அவர்களை முன்னே நிற்கவிடமாட்டோம். ஒன்றோடு ஒன்று சம்பந்தப்பட்ட மூன்று கோட்டைகளில் வந்து மக்களை அழித்த அரக்கர்களைச் சங்காரம் செய்து மக்களைக் காத்த பெருமை மிக்க வலிய வில்லையுடைய திருவேங்கடத்தில் கோவில் கொண்டிருக்கும் சிவபெருமானது செம்பொன்னாலாகிய கோவிலைப் போற்றி புகழ்ந்து பாடுவோம். எப்போதும் புன்சிரிப்புத் தவழும் சிவந்த அழகான உதடுகள் உடைய பெண்களே, முக்கண்களையுடைய எம் தலைவனான அப்பன் ஆடுவதற்குப் பொற்சுண்ணம் இடிப்போம்”.

**உலக்கை பலஓச்சு வார்பெரியர்**
**உலகமெலாம்உரல் போதாதென்றே**
**கலக்க அடியவர் வந்துநின்றார்**
**காண உலகங்கள் போதாதென்றே**
**நலக்க அடியோமை ஆண்டுகொண்டு**
**நாண்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த**
**மலைக்கு மருகனைப் பாடிப்பாடி மகிழ்ந்து**
**பொற்சுண்ணம் இடித்தும்நாமே.** 06

“இறைவனான சிவனுக்குப் பொற்சுண்ணம் இடித்தல் என்னும் சிவசேவையைச் செய்வதற்கு ஊரிலுள்ள கணக் கொடுக்கமுடியாத பெரியவர்கள் வந்து கூடிள்ளனர். அவர்கள் கையில் இருந்த உலக்கைகளுக்கு இவ்வுலகம் என்னும் உரல் போதவில்லை. இந்நிகழ்வைக் கண்டு களிக்க வந்த சிவனின் அடியவர்கள் நிற்பதற்கு இவ்வுலகம் போதவில்லை. எமக்கு நலன் செய்வதற்காகச் சிவன் புத்தம் புதிய மலர் போன்ற தனது பாதத்தை நாம் சூடிக் கொள்வதற்காக எமக்குத் தந்தருளினான். அவன் இமவானுக்கு மருமகன். அவனது பெருமைகளை விதந்து பெருமையுடன் புகழ்ந்து பாடிப் பாடி ஆடி ஆடி மகிழ்ந்து பொற்சுண்ணம் இடிப்போம் நாம்”.

**சூடகந் தோள்வரை ஆர்ப்ப ஆர்ப்பத்**

**தொண்டர் குழமெழுந் தார்ப்ப ஆர்ப்ப**

**நாடவர் நந்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப**

**நாமும் அவர் தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப**

**பாடக மெல்லடி யார்க்கு மங்கை**

**பங்கினன் எங்கள் பராபரனுக்கு**

**ஆடக மாமலை அன்னகோவுக்**

**காடப் பொற்சுண்ணம் இடித்தும்நாமே.** 07

“கையில் அணிந்த வளையல்களும் தோளில் அணிந்த ஆபரணங்களும் “பொற்சுண்ணம் இடிக்கும்போது இனிமையாக ஒலிக்கின்றன. வந்திருந்த சிவனின் அடியவர்கள் பெருங்கூட்டமாய் எழுந்து நின்று ஆனந்தமாக ஆடிப் பாடி ஆர்ப்பரிக்கின்றனர். அதேநேரம் உலகத்தவர் இவையெல்லாம் பயனற்ற செயல் என்று ஏளனம் செய்கின்றனர். அவர்கள் அவ்வாறு பரிசிக்க நாம் அவர்களை எதிர்த்து ஓலமிடுகின்றோம். தனது மென்மையான திருவடிகளில் பாடகம் என்றும் பெறுமதிமிக்க அழகுடைய ஆபரணத்தை அணிந்திருக்கும் பார்வதியின் கணவனும், பெரிய பொன்மலையை ஒத்த பரம்பொருளான சிவபெருமானப் போற்றிப் புகழ்ந்து ஆடிப் பாடியபடி நாம் பொற்சுண்ணம் இடிக்கிறோம்.”

**வாள்தடங்கண்மட மங்கைநல்லீர்**

**வரிவளை ஆர்படபவண் கொங்கைபொங்கத்**

**தோள்திரு முண்டந் துதைந்திலங்கச்**

**சோத்தெம்பி ரானென்று சொல்லிச்சொல்லி**

**நாட்கொண்ட நாண்மலர்ந் பாதங்காட்டி**

**நாயிற் கடைப்பட்ட நம்மையிம்மை**

**ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி**

**ஆடப் பொற்சுண்ணம் இடித்தும்நாமே.** 08

"கூரிய வாளை ஒத்த பிரகாசமான பெரிய கண்களை உடைய அழகிய பெண்களே, கோடுகளை உடைய உங்கள் கைகளில் அணியப் பெற்ற வளையல்கள் இனிமையாக ஒலிக்கவும், பருத்த தனங்கள் அசைந்தாடிப் பூரிப்படையவும், தூக்கிய தோள்கள் தலைகளோடு ஒட்டிப் பிரியவும், திரும்பத் திரும்பச் சிவனைப் புகழ்ந்து போற்றிப் பாடித் துதிப்போம். புதிதாக மலர்ந்த தாமரைப்பூவை ஒத்த அழகு மிக்க சிவனது திருவடிகளைப் போற்றுவோம். அத்திருவடிகளை வணங்கி நாயினும் கடைப்பட்ட நம்மை இப்பிறவியிலேயே ஆட்கொண்டான். அவன் ஆட்கொண்ட விதத்தைப் போற்றிப் பாடி அவன் நீராடுவதற்காக பொற்சுண்ணம் இடிப்போம்."

**வையகம் எல்லாம் உரலதாக**
**மாமேரு என்னும் உலக்கை நாட்டி**
**மெய்யனும் மஞ்சள் நிறைய அட்டி**
**மேதரு தென்னன் பெருந்துறையான்**
**செய்ய திருவடி பாடிப்பாடிச்**
**செம்பொன் உலக்கை வலக்கைபற்றி**
**ஐயன் அணிதில்லை வாணனுக்கே**
**ஆடப் பொற்சுண்ணம் இடித்தும்நாமே.** 09

"அழகான பெண்களே, சிவன் படைத்த உலகங்கள் முழுவதையும் உரலாகக் கொண்டும், மாமேரு மலையை உலக்கையாகக் கொண்டும் மங்களமாகவுள்ள சிவசாந்தியத்தைத் தோற்றுவிப்பது அங்கு நடைபெறும் நிகழ்ச்சியான சிவன் நீராட இடிக்கப்படும் பொன்நிறப்பொடி நிகழ்வாகும். அதனால் நாம் இடிப்பது அதற்கு ஒப்பானது. திருப்பெருந்துறையிலும் தில்லையிலும் எழுந்தருளி அருள்பாலிக்கும் சிவனது செம்மையான பெருமை பொருந்திய திருவடியின் பெருமைகளைப் பாடிப் பாடிப் பொற்சுண்ணம் இடிப்போம்."

**முத்தணி கொங்கைகள் ஆடஆட**
**மொய்குழல் வண்டினம் ஆடஆடச்**
**சித்தஞ் சிவனொடும் ஆடஆடச்**
**செங்கயற் கண்பனி ஆடஆடப்**
**பித்தெம் பிரானொடும் ஆடஆடப்**
**பிறவி பிறரொடும் ஆடஆட**
**அத்தன் கருணையொ டாடஆட**

**ஆடப் பொற்சுண்ணம் இடித்தும்நாமே.** 10

“முத்து மாலைகள் கொங்கைகளில் புரண்டு குறுக்காகக் குலுங்க, உங்கள் அடர்ந்த நீண்ட அழகுபொலியும் கூந்தலில் சூடிய மலர்க்கொத்துக்களில் வண்டுகள் திரண்டிருந்து இன்னிசை பாட, மனமானது சிவனை வசப்படுத்த, சிவந்த கெண்டை மீன் போன்ற உங்கள் கண்களில் உணர்ச்சி மிகுதியால் ஆனந்தக் கண்ணீர் பெருக, எல்லோரும் எம் இறைவனான சிவனை விரும்பியதால் பித்துக்கொள்ள, பக்தர் அல்லாதவர்கள் பிறவிப்பிணியில் அழுந்தித் துன்பமுற எம் பெருமானான சிவபெருமான் எம்மீது அன்பென்ற கருமுனையை வெளிப்படுத்தி எம்முடன் கூடியிருக்க, அவன் நீராடுவதற்காக நாம் எல்லோரும் சேர்ந்து பொற்சுண்ணம் இடிப்போம்.”

**மாடு நகைவாள் நிலாவெறிப்ப**
**வாய்திறந் தம்பவ ளந்துடிப்பப்**
**பாடுமின் நந்தம்மை ஆண்டவாறும்**
**பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்**
**தேடுமின் எம்பெருமானைத்தேடி**
**சித்தங் களிப்பத் திகைத்துத்தேறி**
**ஆடுமின் அம்பலத் தாடினானுக்**
**காடப் பொற்சுண்ணம் இடித்தும்நாமே.** 11

“அழகு மிக்க பெண்களே, நீங்கள் சிவனை நினைத்துப் பொற்சுண்ணம் இடிக்கும்போது மகிழ்வுடன் சிரிக்கும்போது ஒளிபொருந்திய நிலவின் ஒளிபோல உங்கள் பற்கள் மின்னுகின்றன. சிவனை நினைத்து நீங்கள் மகிழ்ந்து குதூகலித்துப் பாடும்போது அழகிய உங்கள் சிவந்த உதடுகள் துடிதுடித்து உணர்வுகளை வெளிப்படுத்தட்டும். இத்தகைய அரும்பணி செய்யும் அழகான பெண்களே இறைவன் தம்மை ஆட்கொண்டருளிய விதத்தைத் திரும்பத் திரும்ப பாடி ஆடி அவனைப் புகழ்ந்து போற்றித் தேடுங்கள். தேடும்போது மிகுந்த மகிழ்வுடன் தேடுங்கள். அவனது கிருபையை உணராதபோது திகைத்திருங்கள். உணரும்பொழுது தெளிவடைந்து ஆனந்தப்படுங்கள். அம்பலத்தில் கூத்தாடும் அம்பலவாணனை குறித்து ஆடிப்பாடி பொற்சுண்ணம் இடியுங்கள்.”

**மையமர் கண்டனை வானநாடர்**
**மருந்தினை மாணிக்கக் கூத்தன்தன்னை**
**ஐயனை ஐயர்பிரானைநம்மை**
**அகப்படுத் தாட்கொண் டருமைகாட்டும்**
**பொய்யர் தம் பொய்யனை மெய்யர் மெய்யைப்**
**போதரிக் கண்ணினைப் பொற்றொடித்தோள்**
**பையர வல்குல் மடந்தைநல்லீர்**

**பாடிப் பொற்சுண்ணம் இடித்தும்நாமே.** 12

“அழகிய பெண்களே, அஞ்ஞான இருள் எம்மைவிட்டு அகன்று விட்டால் அதாவது மலங்கள் அற்றுப் போய்விட்டால் பகலும் தெரியாது, இரவும் தெரியாது, சத்தம் இல்லை, அசத்தம் இல்லை, தன்னந்தனிப்பொருளாகிய சிவனின் நினைப்பே இருக்கும். சிவன் அழிவற்றவர். உலகைப் படைப்பவனான பிரம்மதேவராலும் போற்றி வணங்கப்படும் முதல்வன். பண்டைப் பேரறிவு அவரிடமிருந்துதான் வரும். நீலகண்டனான அவர் தேவர்களுக்கு அமிர்தம் போன்றவன். அவன் மாணிக்கக்கூத்தன். மகாதேவன். தேவர்களின் பெருந்தலைவன். இத்தகைய அளவிடமுடியாத பெருமைகளை உடைய சிவன் எம்மை வலிய வந்து ஆட்கொள்பவன். அவன் பொய்யானவர்களுக்கு பொய்யனாகவே எப்போதும் இருப்பான். அவனையே மெய்ப்பொருளென உணர்ந்து போற்றித் துதிப்போர்க்கு அவன் மெய்யன்பன். தாமரையைப் போன்ற அழகிய கவர்ச்சியான கண்களையும், பொன்னாலான அழகிய வளையல்களை அணிந்த வனப்பான தோள்களை உடைய அழகிய பெண்களே, நாம் நம் இறைவனைப் போற்றிப் புகழ்ந்து பாடிப் பொற்சுண்ணம் இடிப்போம்.”

**மின்னிடைச் செந்துவர் வாய்கருங்கண்**
**வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்**
**என்னுடை ஆரமுதெங்களப்பன்**
**எம்பெருமான் அம வான்மகட்குத்**
**தன்னுடைக் கேள்வன் மகன்தகப்பன்**
**தமையன்எம் ஐயன் தாள்கள் பாடிப்**
**பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்**
**பொற்றிருச்சுண்ணம் இடித்தும்நாமே.** 12

“மின்னல் போன்ற அழகிய இடையையும், செம்பவளம் போன்ற உதடுகளையும், கருமையான கண்களையும், மிகுந்த வெண்மையான பற்களையும், இனிமையான இசையை ஒத்த இனிக்கும் மென்மையான மொழியையும் பேசும் வனப்பு மிக்க பெண்களே, நான் சொல்வதைக் கேளுங்கள். எமக்கு அமிர்தம் போன்ற எங்கள் தந்தை எம்பெருமானான சிவன். சிவன் பார்வதியின் மணாளனாகவும், புதல்வனாகவும், தந்தையாகவும், மூத்த சகோதரனாகவும் இருக்கிறான். அத்தகைய சிவன் எமக்கு இறைவன். பொன்னாலான அழகிய ஆபரணங்களை அணிந்துள்ள அழகிய பெண்களே, அவனது திருவடிகளைப் போற்றிப் புகழ்ந்து பாடிப் பாடிப் பொற்சுண்ணம் இடிப்போம்.”

**சங்கம் அரற்றச் சிலம்பொலிப்பத்**

**தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்**

**செங்கனி வாயிதாழுந்துடிப்பச்**

**சேயிழை யீர் சிவலோகம் பாடிக்**

**கங்கை இரைப்ப அராஇரைக்குங்**

**கற்றைச் சடைமுடி யான் கழற்கே**

**பொங்கிய காதலிற் கொங்கை பொங்கப்**

**பொற்றிருச்சுண்ணம் இடித்தும்நாமே.** 14

“என் அன்புக்குரிய அழகிய தோழிகளே, நீங்கள் அணிந்திருக்கும் சங்கு வளையல்கள் கலகலத்து இனிமையான ஓசையை வெளிப்படுத்துகின்றன. கூந்தலில் நீங்கள் கட்டிய பூமாலை உங்கள் நீண்ட தலைமுடியுடன் சேர்ந்து அசைந்து அசைந்து நடனமாடுகிறது. செக்கச் சிவந்த மெல்லிய உதடுகள் துடிக்கின்றன. அத்தகைய அழகு மிக்க பெண்களே, நாம் சிவலோகத்தைப் போற்றிப் புகழ்ந்து பாடுவோம். சிவனது சடையில் உள்ள கங்கை ஒலிக்கட்டும். பாம்பு சீறி ஆடட்டும். மிக்க அன்பு உள்ளத்தில் பெருகி உவகை வெளிப்பட மிகுந்த அன்புடன் சிவனுக்குப் பொற்சுண்ணம் இடிப்போம்.”

**ஞானக் கரும்பின் தெளியைப் பாகை**

**நாடற் கரிய நலத்தை நந்தாத்**

**தேனைப் பழச்சுவை ஆயினானைச்**

**சித்தம் புகுந்துதிக் திக்கவல்ல**

**கோனைப் பிறப்பறுத் தாண்டுகொண்ட**

**கூத்தனை நாத்தழும் பேற வாழ்த்திப்**

**பாணல் தடங்கண் மடந்தைநல்லீர்**

**பாடிப் பொற்சுண்ணம் இடித்தும்நாமே.** 15

‘‘அழகு மிக்க பெண்களே, ஞானம் எனப்படும் கருப்பஞ்சாற்றின் தெளிவும், அதிலிருந்து உண்டான இனிமையான பாகும், அளவிட முடியாத நன்மையும், சுவையுள்ள புதிய நறும் தேனும், முக்கனிகளின் சாறும், இவையனைத்தும் கனிந்த சுவையை உடையதுமான எம் இறைவனான சிவன் மனதில் புகுந்தால் புகுந்தவரின் மனத்தை இனிக்கச் செய்வான். எமது பிறவிப் பிணியைப் போக்கி ஆண்டருளும் கூத்தப்பெருமானை, நம் நாவில் தழும்பு உண்டாகும்படி பல முறை அவனைப் போற்றிப் புகழ்ந்து தோத்திரம் பாடி வணங்குவோம். கருங்குவளை மலர்களைப் போன்ற அகன்ற

அழகான கண்களை உடைய இளம்பெண்களே, நாம் அவனைப் போற்றிப் பாடி ஆடிப் பொற்சுண்ணம் இடிப்போம்."

**ஆவகை நாமும் வந்தன்பர்தம்போ**

**டாட்செய்யும் வண்ணங்கள் பாடிவிண்மேல்**

**தேவர் கனாவிலுங் கண்டறியாச்**

**செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ் செல்வச்**

**சேவகம் ஏந்திய வெல்கொடியான்**

**சிவபெரு மான் புரஞ் செற்றகொற்றச்**

**சேவகன் நாமங்கள் பாடிப்பாடிச்**

**செம்பொன் செய்சுண்ணம் இடித்தும்நாமே.** 16

"அழகு மிக்க தோழியே, இவ்வுலக வாழ்க்கை துன்பங்கள் பலவற்றைத் தினமும் எமக்குத் தந்து கொண்டேயிருக்கும். நாம் உய்ய வேண்டுமானால் நாம் இங்கு வந்து சிவனுக்கு அடிமையாகி அடிமை வேலை செய்வாரோடு சேர்ந்து நாமும் அடிமையாகி பாடிப் பாடி வேலை செய்வோம். பெருமைகளை உடைய தலைவர்கள் சிவனைக் கனவிலும் கண்டு மகிழமாட்டார்கள். அப்படிப்பட்ட பெருந்தலைவனான சிவன் தனது தாமரை மலரைப் போன்ற தனது திருவடிகளை எமக்கு நனவில் காட்டியருளியவன். ஆக்கத்தை வலியுறுத்தும் ரிசபம் பதித்த வெற்றிக் கொடியை அவன் எப்போதும் தனது கையில் வைத்திருக்கிறான். திமிருடன் திரிபுரங்களில் ஏறி மக்களை அழித்த அசுரரை அழித்த வீரன் அவன். அதனால் அவனது நாமங்களைப் போற்றிப் புகழ்ந்து பாடி ஆடிப் பொற்சுண்ணம் இடிப்போம்."

**தேனக மாமலர்க் கொன்றைபாடிச்**

**சிவபுரம் பாடித் திருச்சடைமேல்**

**வானக மாமதிப் பிள்ளைபாடி**

**மால்விடை பாடி வலக்கையேந்தும்**

**ஊனக மாமழுச் சூலம்பாடி**

**உம்பரும் இம்பரும் உய்யஅன்று**

**போனக மாகநஞ் சுண்டல்பாடிப்**

**பொற்றிருச்சுண்ணம் இடித்தும்நாமே.** **17**

"தோழி, முதலில் தன்னிடத்தில் தேனை வைத்திருக்கும் கொன்றை மலரைப் பாடுவோம். அதன்பின் சிவபுரத்தைப் பாடுவோம். அதன்பின் சிவனது திருச்சடையில் வீற்றிருக்கும் பிறைச்சந்திரனைப் போற்றிப் புகழ்ந்து பாடுவோம். அதன்பின் சிவனது

வாகனமான ரிசபத்தைப் போற்றிப் புகழ்ந்து பாடுவோம். அதற்குப் பின் சிவனது வலக்கையில் மாமிசம் ஒட்டிக் கொண்டிருக்கும் மழுவையும், திரிசூலத்தையும் போற்றிப் பாடுவோம். இறுதியாக விண்ணவரும், மண்ணவரும் உய்வு அடைவதற்காகக் கடலில் எழுந்து ஆர்ப்பரித்த கொடிய நஞ்சை அள்ளியுண்டு அனைவரையும் காப்பாற்றிய சிவனைப் போற்றிப் புகழ்ந்து பாடிப் பொற்சுண்ணம் இடிப்போம்".

**அயன்தலை கொண்டுசெண்டாடல்பாடி**
**அருக்கன் எயிறு பறித்தல்பாடி**
**கயந்தனைக் கொன்றுரி போர்த்தல் பாடிக்**
**காலனைக்காலால் உதைத்தல்பாடி**
**இயைந்தன முப்புரம் எய்தல் பாடி**
**ஏழை அடியோமை ஆண்டுகொண்ட**
**நயந்தனைக் பாடிநின் றாடியாடி**
**நாதற்குச் சுண்ணம் இடித்தும்நாமே.** 18

"தோழிகளே, சிவன் எமது அன்புக்குரியவன். அவன் மீது அன்பு செலுத்தினால் பின்பு அவன் எம்மைவிட்டுச் செல்லமாட்டான். தண்டிக்கமாட்டான், கோபிக்கமாட்டான், நாம் செய்யும் தவறுகளைப் பொறுத்துக் கொள்வான். ஏனென்றால் அவன்தான் எம் தந்தை, எம் இறைவன், தாம் தேவர்கள் என்ற பெருமையும், அரக்கர்கள் தாம் சிவனிடம் வரங்களைப் பெற்றதை மறந்து தாம் தாம் பலசாலிகள் என்றும் சிவனை யுத்தத்திற்கு அழைக்கின்றனர். தான தர்மம் செய்பவன், தனக்கு தேவையானவற்றைத் தன்னால் பெற்றுக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கையில் தான் தான தர்மம் செய்கிறான். இதற்கு மூல காரணம் சிவன் மீதுள்ள நம்பிக்கை. சிவன் தான் கேட்கும்போதெல்லாம் தருவான் என்ற நம்பிக்கை மனிதனுக்குண்டு. ஆனால் தேவர்களுக்கும், அசுரர்களுக்கும் அது இல்லை. சிவன் குலத்தளவே ஆகுமாம் குணம் என்பதை அறிந்து அதற்கேற்பச் செயற்படுபவன். அதனால் தான் அவர்களுக்குக் கேட்டவற்றையெல்லாம் கொடுக்கிறான். இதை அறியாதவர்கள் தான் துன்பப்படுகின்றனர். பிரமதேவனின் தலையைக் கிள்ளி அதைப் பந்தாக நினைத்து உருட்டி விளையாடியவன் சிவன். சூரியனது பற்களை உடைத்தவன். மதயானையைக் கொன்று அதன் தோலை ஆடையாக அணிந்தவன். யமனைத் தனது பக்தனுக்காக உதைத்தவன். முப்புரங்களை எரித்தவன். அத்தகைய சிவன் எம்மை ஆட்கொண்டான். இந்த உண்மையான சிவனின் செயல்களைப் போற்றிப் புகழ்ந்து பாடி நாம் பொற்சுண்ணம் இடிப்போம்."

**வட்டமலர்க்கொன்றை மாலைபாடி**
**மத்தமும்பாடி மதியம்பாடிச்**
**சிட்டர்கள் வாழுந்தென் தில்லைபாடிச்**
**சிற்றம் பலதெங்கள் செல்வம்பாடிக்**
**கட்டிய மாசுணக்கச்சைப் பாடிக்**
**கங்கணம் பாடிக் கவித்தகைம்மேல்**
**இட்டுநின் றாடும் அரவம்பாடி**
**ஈசற்குச் சுண்ணம் இடித்தும்நாமே.** 19

“அழகிய எனது தோழியே, சிவன் அணிந்திருக்கும் வட்டமான அழகிய கொன்றை மாலை, ஊமத்தம்பூ, பிறைச்சந்திரன், நல்லவர்கள் வாழ்கின்ற அழகிய தில்லை, சித் ஆகாயத்தைப் பற்றிய ஞானச்செல்வம், இறைவனுடைய இடுப்பு, கை, உடல் ஆகிய பகுதிகளில் உள்ள பாம்புகள் இவை யாவற்றையும் பாடிப் புகழ்ந்து போற்றிப் பொற்சுண்ணம் இடிப்போம்”.

**வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு**
**மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயினார்க்குச்**
**சோதிய மாய்இருள் ஆயினார்க்குத்**
**துன்பமுமாய் இன்பம் ஆயினார்க்குப்**
**பாதிய மாய் முற்றும் ஆயினார்க்குப்**
**பந்தமு மாய் வீடும் ஆயினார்க்கு**
**ஆதியும் அந்ததுமும் ஆயினார்க்கு**
**ஆடப் பொற்சுண்ணம் இடித்தும்நாமே.** 20

“தோழியே, வேதம், வேள்வி, பரமாத்மா, பிரபஞ்சம், வெளிச்சம், இருள், துன்பம், இன்பம், சக்தி, சிவசக்தி, பந்தம், மோட்சம், தொடக்கம், முடிவு ஆகிய அனைத்துமாய் இருப்பவன் எங்கள் இறைவனான சிவன். அவ்வாறான பெரும் பொருளாகத் திகழ்கின்ற சிவனைப் போற்றிப் புகழ்ந்து பாடி ஆடிப் பொற்சுண்ணம் இடிப்போம்”.

*திருச்சிற்றம்பலம்.*